2011 செப்டம்பர் 8]

100—

நீதிமன்றம்

***796—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டையில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன், செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நிலக்கோட்டையில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குரிய செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், செயற்குறிப்பின் நிதிச் செலவினத்திற்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே நிலக்கோட்டையில் சார்பு நீதிமன்றம் அமைத்துக் தரப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மாவட்ட நீதிமன்றம் ஒன்று, விரைவு நீதிமன்றம் ஒன்று, சார்பு நீதிமன்றம், முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உட்பட நான்கு, மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இரண்டு, குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மூன்று, பழனியில் சார்பு நீதிமன்றம் ஒன்று, மாவட்ட உரிமையியல்*

நீதிமன்றம் ஒன்று, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்று, நிலக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்று, வேடசந்தூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கொடைக்கானலில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், நத்தத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றும், அதேபோல் ஒட்டன்சத்திரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றும், மாவட்டக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. சார்பு நீதிமன்றமாக அமைக்கவேண்டுமென்றால், உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலிலிருந்துதான் சார்பு நீதிமன்றம் ஏற்படுத்தமுடியும். ஆகவே, உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், செயற்குறிப்பின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

திரு. ஆ. ராமசாமி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் பல தாலுகாக்களில் இருக்கக்கூடிய நீதிமன்றங்கள் குறித்து தெரியப்படுத்தி இருக்கிறார்கள். மாவட்டத் தலைநகரமான திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய மாவட்ட நீதிமன்றத்தில் கட்டட வசதி இருக்கிறது. அதன் அருகில் அரசு மருத்துவமனை, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பேருந்து நிலையம் இருப்பதனாலும், அந்த நீதிமன்றம் பொதுமக்களுக்கும், அங்கிருக்கக்கூடிய ஊழியர்களுக்கும் மிகவும் சிரமத்தைத் தருகிறது என்று வழக்கறிஞர்கள் சங்கமும் தொடர்ந்து வலியுறுத்தி

2011 செப்டம்பர் 8]

வருகிறார்கள். நீதிமன்றம் கட்ட சொந்த இடம் இருக்கிறது. ஆகவே, மாவட்டத் தலைமை நீதிமன்றத்தை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால், பதில் தெரிவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் தனித் தனியாகப் பழைய கட்டடங்களில் இயங்கிக்கொண்டு வருகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகிறார்கள். புதிய கட்டடம் கட்ட போதுமான இடவசதியும் இருக்கின்றது. ஆகவே, திருத்துறைப்பூண்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்பு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமானால், அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய நீதிமன்ற நீதிபதிகளிடமிருந்து ஒரு கருத்துரு சென்னை, உயர் நீதிமன்றத் தலைமைப் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும். அதை அவர் பெற்று அரசுக்கு அனுப்புகிறார். நிதிநிலைக்கேற்ப*

சார்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, அரக்கோணம் நகரில் இயங்கிவரும் முகாம் சார்பு நீதிமன்றத்தை நிரந்தர சார்பு நீதிமன்றமாக அமைத்திட வேண்டி, 2009–இல் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சென்னை, உயர் நீதிமன்றத்தால் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், அந்தப் பரிந்துரை நிராகரிக்கப்பட்டு சிறப்பு நீதிமன்றம் அமைத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை திருப்பி அனுப்பப்பட்டது. எனவே, வழக்கறிஞர்கள், பொதுமக்கள் நலன் கருதி சென்னை உயர் நீதிமன்றத்திடம் பரிந்துரையை மீண்டும் கேட்டுப் பெற்று முகாம் சார்பு நீதிமன்றத்தை நிரந்தர சார்பு நீதிமன்றமாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நீதிமன்றங்களை அமைக்கவேண்டும் என்று கேட்கின்றபோது, இதே பதிலைத்தான் தொடர்ந்து சொல்லவேண்டி இருக்கிறது. ஆகவே, மாவட்டங்களிலிருந்து சென்னை, உயர் நீதிமன்றப் பதிவாளருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, அவரிடமிருந்து அரசுக்குப் பெறப்படும் பரிந்துரையின் அடிப்படையிலே சார்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. ந. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி*

அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்யாறு தொகுதியிலே நான்கு நீதிமன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நான்கு நீதிமன்றங்களும் 90 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட பழைமை வாய்ந்த கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே வழக்காட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து செல்கின்றனர். அந்த நீதிமன்றம் பழைமையான கட்டடத்தில் இயங்கி வருவதால், அதை ஒருங்கிணைந்த நீதிமன்றமாக இந்த ஆண்டே கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குத்தான் நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையின்போது எந்தெந்த நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்பது அறிவிப்புகளில் வெளியிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

சுற்றுலாத் தலம்

***439—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட வடசென்னிமலை முருகன் கோவிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS